1980 ஜூலை, 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.45 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

53. தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு வரி விதிப்புப்பெறாத நிலங்களின்மீது ரயத்துவாரி வரி விதிப்புச் சட்டத்தில் (தமிழ் நாடு சட்டம் 31/1973) விதிகள் செய்வது குறித்து, வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 15-4-1980ஆம் தேதி யிடப்பெற்ற 341 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு, வரி விதிப்புப் பெறாத நிலங் களின் மீது ரயத்துவாரி வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1973) 22(2) பிரிவின்கீழ் பேரவையின் முன் வைக்கப் பெற்றது].

54. 1979ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகம்— மதுரை-காமராஜர் பல்கலைக் கழகச் (இரண்டாவது திருத்த) (தமிழ்நாடு சட்டம் 8/1980) சட்டம் செயலுக்கு வரும் தேதி குறித்து, கல்வித் துறையின் 22—3—1980 ஆம் தேதியிடப் பெற்ற 545ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு, [1923 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகச் (தமிழ்நாடு சட்டம் 7/1923) சட்டத்தின் 50(2) பிரிவு மற்றும் 1965ஆம் ஆண்டு மதுரை-காமராஜர் பல்கலைக் கழகச் (தமிழ்நாடு சட்டம் 33/1965) சட்டத்தின் 58(2) பிரிவு ஆகியவற்றின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

55. தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு பதிப்பு எழுத்தர் உரிம விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 18—12—1979 ஆம் தேதி யிடப்பெற்ற 1941 ஆம் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 26/1908) 52 ஆவது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவு மற்றும் 89.அ பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*87. கோரிக்கை எண். 28-க்கான சமுதாய வளர்ச்சி, ஊராட்சி வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1980-81 (தமிழ் ஆங்கிலம்).